
# நூற்றாண்டு விழா மலர்

## கொக்குவில் இந்துக் கல்லூரி

## 1910–2010




# Kokuvil Hindu College

## Centenary Souvenir

# நூற்றாண்டு விழா மலர்

## கொக்குவில் இந்துக் கல்லூரி

## 1910–2010

வெளியீடு :

நூற்றாண்டு விழாச் சபை,

கொக்குவில் இந்துக் கல்லூரி.

# வடக்குக் கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழில் உற்பத்தித்துறை விரிவாக்கத்தின் முக்கியத்துவம்

**Mr.S.S.Uthayakumar,**
**B.A (Hons), M.Phil (Econ).**
Senior Lecturer,
Department of Economics,
University of Jaffna.

## அறிமுகம் :

யாதாயினும் ஒரு உற்பத்தி சந்தையை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்படும் பொருளியல்சார் செயற்பாடு கைத்தொழிலாக்கம் அல்லது கைத்தொழில் செயற்பாடு எனப்படும். அதாவது சூழலில் அமைந்து காணப்படும் பொருளாதாரங்களின் ஆரம்ப இயல்புகளை மாற்றி அமைப்பதன் மூலம் மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாடினையே கைத்தொழில் என்றபதம் சுட்டிநிற்கின்றது. இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதியில் கைத்தொழில் உற்பத்தித்துறை எந்தளவிற்குப் பொருத்தமான துறையாக இருக்க முடியும் என நோக்கின், இலங்கைப்பொருளாதாரத்தில் மொத்த நிலப்பரப்பில் வடக்குக் கிழக்கு பிரதேசமானது 18,333 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் (20 வீத நிலப்பரப்பையும்) 2/3 பங்கு கடற்கரைப்பிரதேசத்தையும் கொண்டுள்ளது. அத்துடன் நாட்டின் பல இன மற்றும் பல மத மக்கள் வாழ்ந்து வருவதனால் பல்கலாச்சார (multi-cultiural) பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது. எந்த ஒரு நாட்டிலும் கைத்தொழில் உற்பத்தித்துறை பிரதேச அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றது. அந்த வகையில் இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதியின் கைத்தொழில் உற்பத்தி துறையானது இப்பிரதேச அபிவிருத்திக்குப் பொருத்தமான துறையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள கைத்தொழில் வளங்களைப் பொறுத்த வரை நாட்டின் பல பகுதிகளோடு ஒப்பிடும் இடத்து இப்பிரதேசத்தில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் சீராகப்பிரயோகிக்கக் கூடிய வளங்கள் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் இங்குள்ள வளங்களை நாம்

1) கனிப்பொருள் வளம்
2) விவசாய வளம் மற்றும்
3) கடல் உயிர்சார் வளம் எனப்பிரித்து நோக்க முடியும்.

இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இயங்கிய, தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய கைத்தொழில்கள் என்ற அடிப்படையில் இப்பிரதேசத்தின் கைத்தொழில் உற்பத்தித்துறை இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்தளவுக்கு பொருத்தமான துறையாக இருக்க முடியும் என்பதையும் எத்தகைய கைத்தொழிற் துறைகள் பொருத்தமாக உள்ளன என்பதையும் படிமுறையாக நோக்குவோம்.

## பொருளாதாரம் ஒன்றில் கைத்தொழிற் துறை அபிவிருத்தியின் அவசியம் :-

ஒரு பொருளாதாரத்தில் உள்ள முக்கிய துறைகளான விவசாயத்துறை மற்றும்

கைத்தொழிற் துறை என்பவற்றில் விவசாயத்துறையினை விட கைத்தொழிற்துறையானது பின்வரும் விடயங்களில் முக்கியமானதாக உள்ளது. அந்த வகையில் :

- விவசாயத்துறை உற்பத்திகள் இயற்கை அனர்த்தங்களினால் முற்றாகவோ, அல்லது பகுதியாவோ பாதிப்புறலாம். அதே நேரம் கைத்தொழிற் துறை வெளியீடுகள் அவ்வளவாகப் பாதிப்படைவதில்லை.
- கைத்தொழிற்துறை உற்பத்திகளை குறுகியகாலத்தில் அதிகரிக்க முடியும். ஆனால் விவசாயத்துறையினைப் பொறுத்தவரை பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க குறிப்பிட்ட காலம் தேவையாகும்.
- விவசாயத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான கேள்வியானது சனத்தொகை அதிகரிப்பின் போது தான் அதிகரிக்கும். பொதுவாக கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வி நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கின்ற போது சார்பளவில் அதிகரிக்கும்.
- சந்தைப்படுத்தல் செலவானது கைத்தொழில் வெளியீடுகளுக்கு விவசாயத்துறை வெளியீடுகளை விடக் குறைவாகும்.
- விவசாயத்துறையானது கல்வியறிவு குறைந்த ஆண்களையே கவரக்கூடிய தன்மையுடையதாக இருப்பினும் வேலை வாய்ப்பை வழங்குவதில் ஊழியப்படையில் கைத்தொழிற்துறை : கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு கூடியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என அதிகளவானோருக்கு வேலை வாய்ப்பைத் தரவல்லது.
- கைத்தொழிற் பொருட்களின் நிரம்பல் நெகிழ்ச்சி உடையதாகவும் காலநிலை கட்டுப்படுத்தாததாகவும், விலை உயர்வுக்கு ஏற்ப நிரம்பலை மாற்றியமைத்து இலாபத்தினை உழைக்க வாய்ப்புள்ளது எனலாம். இந்த நிலைமை விவசாயத்துறைக்குப் பொருந்துவதில்லை.
- விவசாயத்துறையில் தொழில் விரிவாக்கத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகும். ஆனால் கைத்தொழில் துறையில் பல உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியை உருவாக்க முடியும். உதாரணமாக வீட்டு நிர்மாணம், மரம், சீமெந்து, உலோகம் போன்றவற்றின் உற்பத்தியைத் தூண்டிவிடும்.
- கைத்தொழிற் துறையில் உற்பத்தி வேறாக்கம் என்பது அதிகளவில் உண்டு. இதனால் உபயோகத்திற்கான பொருட்களையே பல்வேறு வடிவங்களில் பல்வேறு விலைகளில் விற்க முடிவதால் கேள்வி அதிகமாக இருக்கும். ஆனால் விவசாயத்துறையில் இது சாத்தியப்படாது. உதாரணம் : யப்பான் - கைக்கடிகாரம்

## இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி

### ஏறக்குறைய கைத்தொழிலமயமாக்கல் இடம் பெறாத காலப்பகுதி (1948-1960)

கி.பி. 1505 இல் இருந்து சுமார் 443 வருடங்கள் அந்நியராட்சியின் கீழிருந்து 1948 இல் சுதந்திரமடைந்து சுதேச ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் வந்த இலங்கைப் பொருளாதாரமானது ஆரம்ப தசாப்த காலகட்டத்தில் பொருளாதாரக் கொள்கையில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக 1951, இல் இலங்கைக்கு வருகை தந்திருந்த உலக வங்கித் தூதுக்குழுவானது கைத்தொழில் அபிவிருத்திக்கு அரச மொத்த முதலீட்டில் 4.7 சதவீதமான பங்கு போதுமானதென்றும் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் சிபார்சு செய்திருந்தது.

இச்சிபார்சானது அரச முதலீட்டுக் கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்தியதையும் அதன் விளைவாக இக்காலப்பகுதி கைத்தொழில்மயமாக்கல் குறைந்த அல்லது இல்லாத காலப்பகுதியாகவே இருந்துள்ளது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டிருந்தமையால் சுதந்திரம் அடைந்தகாலத்தில் நிலவிய பொருளாதார சுபீட்சமானது 1950 இன் இறுதிப்பகுதியில் குறைந்து மிகவும் குறைவடைந்து காணப்பட்டது. இந்நிலைமையானது நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை மிகவேகமாக குறையச் செய்தது. இதனால் கைத்தொழிற் துறை அபிவிருத்தி மீது கவனம் செலுத்தவேண்டிய தேவையும் ஏற்பட்டது.

**இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கல் இடம்பெற்ற காலப்பகுதி (1961-1965)**

இலங்கையில் கைத்தொழிற் துறை அபிவிருத்தியானது நாட்டின் அபிவிருத்திக்கான ஒரு நிலையாக ஒரு கொள்கையாக அன்றி அவ்வப்போது நிலவிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஒன்றாகவே பெரும்பாலும் இருந்துள்ளது. 1950களின் பிற்பகுதியில் நாடு எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 1960களின் ஆரம்பத்திலிருந்தே இறக்குமதிப் பதிலீட்டு கைத்தொழில்மயமாக்கல் உபாயத்தினை நாடு முழுவதும் அமுல்படுத்தத் தொடங்கியது. இறக்குமதி செய்யப்படுகின்ற கைத்தொழிற் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டில் கைத்தொழிற் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் புதிய நடைமுறையும் அமுலாக்கப்பட்டது.

**1977 இன் பின்னர் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் மயமாக்கல் இடம்பெற்ற காலப்பகுதி**

இலங்கையின் பொருளாதார வரலாற்றில் முக்கிய திருப்புமுனையான ஆண்டாகத் திகழும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட 1977 இல் இருந்து கைத்தொழில் கொள்கையானது வெளி நோக்கிய பார்வை கொண்டதாக மாற்றங் கண்டது. இவ்வகையில் -

- வங்கி, காப்புறுதி, வீதிப்போக்குவரத்து, கப்பற் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து என்பன போன்ற பல சேவைகள் பல்கிப் பெருகின.
- வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தது.
- நாட்டின் ஏற்றுமதி வருமானம் கைத்தொழிற் துறை சார்ந்திருக்கும் நிலை உருவானது.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு குறைந்த கைத்தொழில், சேவைத்துறைகளின் பங்கு அதிகரித்து ஒரு சாதகமான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் ஏற்படத்தொடங்கியது.
- வேலைவாய்ப்பு அதிகரித்து வேலையின்மை குறைவடைந்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சி ஓரளவிற்கு உறுதியாகச் செல்லத் தொடங்கியது.

**வடக்குக் கிழக்கில் கைத்தொழிற் துறை அபிவிருத்தி : அதன் பொருத்தப்பாடு :-**

பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் நோக்கும்போது பொதுவாக விவசாயத்துறையின் மிகையிலிருந்து கைத்தொழில்துறை உருவாக வேண்டும். ஆனால் இலங்கைப் பொருளாதாரத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலைமையினை எடுத்து நோக்கும் போது அவற்றின் வள அடிப்படையில் நோக்கினால் இப்பிரதேசங்களில் காணப்படும் மூலப்

பொருட்கள் கைத்தொழில் துறையை உரு வாக்குவதற்கு ஏதுவாக உள்ளது.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப் படும் கைத்தொழிலுக்கான வளங்கள் :**

வடமாகாணத்தில் காணப்படும் கனிய வளங்களில் ஒன்றான கண்ணாடிமணல் (படிகமணல்) நாகர் கோவில் பகுதியில் காணப்படுகின்றது. இது வீடு கட்டுதல், சீமெந்துக்கல் போன்ற பொருட்கள் உற்பத்திக்காக மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சிலிக்கா மணல் வல்லிபுரக் கொவில் பகுதியில் காணப்படுகின்றது. இதனைக் கண்ணாடி உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்.

திருக்கோவில் தொடக்கம் புத்தளம் வரை தொடர்ந்து மன்னார் கரையோரப் பிரதேசம் வடகிழக்கிற்குரிய பிரதேச மாகும். இப்பகுதியில் கைத்தொழிற் துறைக்குத் தேவையான வளங்கள் காணப்படுகின்றன. இல்மனைற் எனப்படும் கனியவளம் கடற்கரையில் குவிக்கப்படும் ஒருவகை மணலிலிருந்து பெறப்படு கின்றது. இக்கனியவளமானது புல்மோட்டை, திருக்கோவில் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது. புல்மோட்டையில் இல்மனைற் தொழிற்சாலை உள்ளது. இங்குள்ள இல்மனைற் 75 வருடங்களுக்குப் போதுமானதாக இருப்பதாகவும் இங்கு தோண்டி எடுக்கப்படும் இல்மனைற் கனியவளத்தை இறக்குமதி செய்வதில் யப்பான் முதனிலை வகிக்கின்றது. இந்த வகையில் ஒரு வருடத்திற்கு 6000 தொன் இல்மனைற் கனியவளத்தை யப்பான் இறக்குமதி செய்கின்றது. இங்கு இக்கனியவளத்தில் ஆக இதுவரை 20 சதவீதமே தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் கனியவளங்களில் முன்னிலை வகிப்பது உப்பு ஆகும். இது வடக்கில் ஆனையிறவு, கல்லுண்டாய், செம்மணி போன்ற இடங்களில் உப்பளங்கள் உண்டு. கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் உப்பு உணவின் சுவையூட்டலுக்குப் பயன்படுத்தப் படுகின்றது.

களிமண்ணும் வடக்குக் கிழக்கு பகுதி களில் காணப்படும் கனியவளங்களில் ஒன்றாகும். களிமண்ணை அடிப்படை யாகக் கொண்ட கைத்தொழில்கள் உண்டு. சாதாரண களிமண், ஒட்டுக்களிமண் என்பன ஒட்டிசுட்டான், அம்பாறை ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. செங்கல், ஓடு, சட்டி மற்றும் பானை என்பனவற்றின் உற்பத்திக்குப் பயன்படுகின்றது.

காரீயம் என்ற கனியவளமானது, வவுனியாவிலும் முருகைக்கல் என்ற கனிய வளமானது, குச்சவெளி, கல்குடா, நெடுந்தீவு, மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரை யோரப்பகுதிகளிலும் காணப்படுகின்றது.

சிப்பி பெரியவிளான் பகுதியில் காணப்படுகின்றது. சிப்பியிலிருந்து நீறிய சுண்ணாம்பு, நீறாத சுண்ணாம்பு என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன் மூலம் குடிசைக்கைத்தொழில் விருத்தி செய்யலாம்.

சுண்ணக்கல் - இதில் $CaCo_3$ (Calciam Carbonate) அடங்கும் பாறைகளையே சுண் ணாம்புகற்கள் என்பர். இது யாழ்குடாக் கரையோரங்களில் காணப்படுகின்றது. குறிப்பாக காங்கேசன்துறை, மயிலிட்டி போன்ற இடங்களில் உள்ளது. சீமெந்துக் கைத்தொழில் உற்பத்திக்கு இது பயன்படுத் தப்படுகின்றது. இதனால் தான் காங்கேசன் துறையில் சீமெந்துக் கைத்தொழில்சாலை அமைவிடம் பெற்றிருந்த போதிலும் யுத்த

நிலமைகளால் தற்போது அது இயங்குவதில்லை எதிர்காலத்தில் அது மீள இயங்குவதற்கான வாய்ப்புகள் கனிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரும்புத்தாது என்னும் கனியவளம் இரும்பு சேர்வைகள் அடங்கும் மண் இரும்புத்தாது எனப்படும். இதிலிருந்து இரும்பையும், உருக்கையும் உற்பத்தி செய்யலாம். சேருவில் பகுதியில் உள்ளது.

## வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள கைத்தொழில்கள் தொழிற்சாலைகள் :-

சீமேந்துக் கைத்தொழில் :

இது 1953 இல் தொடங்கப்பட்ட இலங்கையில் பாரிய கைத்தொழிலாகும். இத்தொழிற்சாலை காங்கேசன்துறையில் காணப்பட்டது. இக்கைத்தொழிற்சாலைக்குத் தேவையான 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மூலப்பொருளான சுண்ணக்கல் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற காரணத்தால் இக்கைத்தொழிற்சாலையானது குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறையில் நிறுவப்பட்டது.

இரசாயனக்கைத்தொழில் :-

இலங்கையின் ஒரேயொரு இரசாயனத் தொழிற்சாலை பரந்தன் என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் இரசாயனத் தொழிலுக்கு வேண்டிய அடிப்படை மூலப்பொருளான உப்பு பரந்தனுக்கு அண்மையிலுள்ள ஆனையிறவில் காணப்படுகின்றமையாலாகும்.

சீனிக்கைத்தொழில் :-

சீனி தொடர்பான உள்நாட்டுத் தேவையில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அம்பாறைக்கு அண்மையிலுள்ள கிங்குராணை என்ற இடத்தில் சீனித் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணாடிக் கைத்தொழில் :-

இத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளான சிலிக்காப் படிவுகள் 98 சதவீதமானவை யாழ்ப்பாணத்தில் உள்ள குடத்தனை, வல்லிபுரம், நாகர் கோவில் பகுதிகளில் ஏறத்தாழ 20 சதுரகிலோ மீற்றர் பகுதியில் காணப்பட்டது. இருப்பினும் இன்றுவரை பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்டதில்லை.

காகிதக் கைத்தொழில் :-

இது கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வடக்கில் உள்ள வாழைச்சேனை என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட்டதற்குக் காரணம் காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருட்களில் ஒன்றான வைக்கோல் இப்பகுதியில் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றமை என்பதனாலாகும்.

பிற கைத்தொழில்கள் :-

உப்பு, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதேபோல கீழ்வரும் இடங்களில் அவற்றோடு தொடர்புடைய வளங்கள் அதிகமாகக் காணப்படுவதனால் அவற்றிக்குரிய கைத்தொழிற்சாலைகளும் காணப் படுகின்றது.

திக்கத்தில் - வடிசாலை (சாராய உற்பத்தி)
வவுனியாவில் - பால் உற்பத்தி
மட்டக்களப்பில் - அரிசி ஆலைகள்
கும்புறுமலையில் - முந்திரிகை, பால் பதனிடும் நிலையங்கள்.

வடபகுதியில் இயங்கிய தொழிற் சாலைகள் அண்மைக்காலங்களில் ஆரம்பிக்கப்பட்டவை அல்ல. இலங்கை

சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே இவை முயற்சியாண்மையாளரால் ஆரம் பிக்கப்பட்டது. வடக்குக் கிழக்கில் குறிப்பாக வடக்கில் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளை விட முயற்சியாண்மை யாளரால் ஆரம்பிக்கப்பட்டவை அதிக மாகும். பின்வரும் கைத்தொழிற்சாலைகள் இதற்கு சான்றுபகருகின்றது.

- 1914 பங்குனியில் 'மச்சாடோ' சோடா குளிர்பான தொழிற்சாலை (நிறுவுனர் - யோசவ் மச்சாடோ)
- 1914 பங்குனியில் சீனித்தொழிற்சாலை நிறுவப்பட்டது. (நிறுவுனர் A.Weighal)
- 1916 பங்குனியில் சீனித்தொழிற்சாலைக் கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. (இரண்டும் ஒன்றா என்பது தெளிவாக இல்லை)
- பேபி மார்க் என்ற பெயரில் சோடா குளிர்பான தொழிற்சாலை வல்வெட்டித் துறையில் ஆரம்பிக்கப்பட்டது திறமையாகவும் நிர்வகிக்கப்பட்டது (நிறுவுனர் சுப்பிரமணியம்)
- டாலர் அலுமினியத்தொழிற்சாலை மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அலுமினியத் தொழிற்சாலை யாகும். (நிறுவுனர் சம்பந்தர்) ஆரம் பத்தில் சீனத்தொழில்நுட்பவிய லாளர்கள் வந்து இத்தொழிற்சாலையில் பணிபுரியவிருந்த தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கியிருந்தனர்.
- 'எல்பிகெம்' வாளி உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படது. (நிறுவுனர் சின்னத்தம்பி)
- மஸ்கன்ஸ் என்ற பெயருடன் அஸ்பெக்டஸ் கூரைத்தகடுகள்,
- மில்க்வைற் சோப், லாலா சோப், பிறைற் சோப், உற்பத்திகள்
- அன்டசன் என்னும் பெயருடன் இறால் பதனிட்டு ஏற்றுமதி செய்தல்.
- கண்ணாடித்தொழிற்சாலைகள் நீர்வேலி யிலும் கீரிமலையிலும் நிறுவப்பட்டு கண்ணாடிக்குவளைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டது.
- ஆணி உற்பத்தி, ரயர் உற்பத்தி, மை உற்பத்தி,
- கடல்பாசியை தகரத்தில் அடைத்து (உணவிற்காக) ஏற்றுமதி செய்தல்,
- அண்ணா கைத்தொழில் நிறுவனம் எனப் பல கைத்தொழில்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
- வடக்குக் கிழக்கு பகுதியில் மீன்வளம் அதிகமாக இருப்பதால் மீன்பிடித்த லுடன் தொடர்புடைய மீன் பதனிடல் கைத்தொழில், ஐஸ்கட்டி கைத்தொழில், படகு கட்டும் கைத்தொழில், வலை தைத்தல் கைத்தொழில் என்ற பல தொழில்கள் காணப்படுகின்றன.

**தொகுப்புரை**

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகளின் அனுபவத்திலிருந்து நாம் பல பாடங்களை எமது நாட்டிற்கும் குறிப்பாக வடக்குக் கிழக்கு பிரதேசத்திற்கும் பெற்றுக் கொள்ளலாம். 19 ஆம் நூற்றாண்டில் ஆரம் பத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளான ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழிற் துறையின் வளர்ச்சியினால் ஏற்பட்டதாகும்.

NIC நாடுகள், சீனா, இந்தியா என்பவற் றினது வளர்ச்சிக்கும் கைத்தொழில் விரி வாக்கமே ஏதுவாகின்றது. இலங்கையில் சுதந்திர காலப்பகுதியிலிருந்து நோக்குகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிற் துறையின் பங்கு அதிகரித்து வருகின்றது.

எனவே நாடுகளாக அன்றி பிரதேசங் களில் அவை பேணத்தகு பொருளாதார

வளர்ச்சி அடைய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமானது உலக வளர்ச்சிப் போக்கில் அதாவது வடக்குக் கிழக்குப் பிர தேசத்தைப் பொறுத்தும் கைத்தொழில் அபிவிருத்தியின் தேவை உணரப் பட்டுள்ளது.

கைத்தொழிற் துறை வளர்ச்சியடைந்து செல்லும் போது அத்துறையுடன் இணைக் கப்படவேண்டிய வேறு உற்பத்திகளும் (அதாவது முன்கொழு, பின்கொழு அடிப்படையில் உற்பத்திகளின்) வளர்ச்சி யும் ஏற்படுவது மட்டுமல்லாது பொருளா தாரக் கட்டமைப்பின் இன்னொரு முக்கிய துறையான சேவைத் துறையின் கேள்வியும் அதிகரித்துக் கொண்டே செல்லும். எனவே அரசு நேர்மையான முறையில் தேசிய வளர்ச்சி நோக்கில் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து நடைமுறைப் படுத்துமானால் வடக்குக் கிழக்கு பிரதேசங் களின் வளர்ச்சியானது கைத்தொழில்துறை மூலம் துரிதமாக்கப்படுவது மட்டுமல்லாது அதிகரித்துச் செல்லும் என்பது குறிப் பிடத்தக்கது.

**உசாத்துணைகள் :**


1. இலங்கை மத்திய வங்கி பல்வேறு வருட ஆண்டறிக்கைகள்.
2. இலங்கை மத்தியவங்கியின் பல்வேறு வருட பொருளாதார மீளாய்வுகள்.
3. இலங்கை மத்திய வங்கியின் மாதாந்த வெளியீடான குறிப்பேடுகள்.
4. இலங்கை முதலீட்டு சபையின் பல்வேறு வருட ஆண்டறிக்கைகள்.
5. இலங்கை நுகர்வோர் சமூகப் பொருளாதார ஆய்வு அறிக்கைகள்.
6. கைத்தொழிற் துறை தொடர்பான பல்வேறு வருடாந்த அறிக்கைகள்.
7. இலங்கை மத்திய வங்கியின் சுதந்திர பொன்விழா மலர் (1998).
8. மக்கள் வங்கியின் மாதாந்த வெளி யீடான பொருளியல் நோக்குகள்
9. பேராசிரியர் L.D. லக்ஷ்மன் என்பவரால் தொகுக்கப்பட்ட Delimmas of Developmemt (1998)
10. வடக்குக் கிழக்கு மாகாண சபை வெளியீடுகள்
11. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலுள்ள மாவட்ட புள்ளிவிபர திரட்டுக்கள்.
12. இப்பிரதேச கைத்தொழில் முயற்சி யாளர்களுடனான நேர்காணல்.
13. Asian Development Bank/Japan Bank for international cooperation/Japan International cooperation Agency/World Bank.
14. Planning and development Secretariat (2005) Post Tsunami Construction.
15. " From relief and Rehabilitation to peace in Sri lanka" written by Stokke, Krishnan and Shanmugaratnam Vol. 02 No. 03 Social Scientists Association, Colombo
15. Mahinda Chintanai written by the Government 2005.


◆ ◆ ◆